# முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

## தமிழ்

வகுப்பு - ஐந்து - ____________

நேரம்: 2மணி

---

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 10 × 1 = 10

1. எழுவாய் எப்போதும் ______________ லாகவே இருக்கும்.

   அ) வினைச்சொல் ஆ) இடைச்சொல் இ) பெயர்ச்சொல்

2. ‘மரப்பொந்து’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

   அ) மரம் + பொந்து ஆ) மர + பொந்து இ) மரப் + பொந்து

3. மழை பெய்வதற்குக் காரணமாக இருப்பது ______________

   அ) வானம் ஆ) பூமி இ) கடல்

4. ‘இம்மை’ என்ற சொல் குறிக்கும் பொருள் ______________

   அ) இப்பிறப்பு ஆ) மறுபிறப்பு இ) முற்பிறப்பு

5. ‘மடை + தலை’ - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______________

   அ) மடைதலை ஆ) மடைத்தலை இ) மடத்தலை

6. ‘ஆந்தை அலறும்’ என்பது ______________

   அ) ஒலிமரபு ஆ) வினைமரபு இ) பெயர் மரபு

7. ‘வண்ணத்தமிழ்’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

   அ) வண்ணத் + தமிழ் ஆ) வண்ணம் + தமிழ் இ) வண்ண + தமிழ்

8. ‘பல்லுக்குறுதி’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

   அ) பல் + உறுதி ஆ) பல்லுக்கு + உறுதி இ) பல்லுக்கு + குறுதி

9. ‘புரவி’ - என்பதன் பொருள் ______________

   அ) குதிரை ஆ) மீன் இ) கண்கள்

10. ‘பாடல் பாடினாள்’ - இத்தொடரில் ______________ இல்லை.

    அ) எழுவாய் ஆ) பயனிலை இ) செயப்படுபொருள்

**II. எதிர்ச்சொல் தருக.** $5 \times 1 = 5$

11. இம்மை x ___________
12. நல்வழி x ___________
13. நேற்று x ___________
14. புதுமை x ___________
15. வருத்தம் x ___________

**III. சொற்பொருள் தருக.** $5 \times 1 = 5$

16. நல்கிய - ___________
17. மகரம் - ___________
18. நனி - ___________
19. கருதவும் - ___________
20. அடக்கம் - ___________

**IV. ஒலி மரபுச்சொற்களை எழுதுக.** $5 \times 1 = 5$

21. பூனை - ___________
22. எலி - ___________
23. சேவல் - ___________
24. காகம் - ___________
25. நாய் - ___________

**V. மனப்பாடப்பாடல்** $1 \times 4 = 4$

26. "அடக்கம்" எனத் தொடங்கும் மூதுரை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**VI. வினாவிற்கு விடையளி.** $1 \times 5 = 5$

27. குடிநீர் வசதி வேண்டி விண்ணப்பம் வரைக.

**VII. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** $7 \times 2 = 14$

28. நரி, மானை எங்கு அழைத்துச் சென்றது?
29. விடுகதை என்றால் என்ன?
30. கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை?
31. சிறுவனின் நேர்மைக்கு கிடைத்த பரிசு யாது?

32. கள்வரால் கவர்ந்து செல்லக்கூடியது எது?

33. பாடப்பகுதியில் எத்தனை வகையான மரபுச்சொற்கள் இடம் பெற்றுள்ளன?

34. செல்வமணி செய்தவற்றை உமது சொந்த நடையில் கூறுக.

35. பண்பால் சிறந்தவர்களாக ஆரீஸ் எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?

36. பாரதிதாசன் எதனை என் உயிர் என்று கூறுகிறார்?

**VIII. வினாக்களுக்கு ஏற்ப விடையளி.** 12

37. அ) கொடை __________

ஆ) கோடை __________

(சொற்றொடர் உருவாக்குக.

38. அ) கையில் அணிவது __________ (வலை / வளை)

ஆ) சமைக்க உதவுவது __________ (புளி / புலி)

(சரியான சொல்லை எடுத்து எழுதுக.)

39. அ) Cyclone - __________

ஆ) District - __________

(தமிழ்ச்சொல் எழுதுக.)

40. அ) ஐந்தில் __________ ஐம்பதில் வளையாது.

(பழமொழியை நிறைவு செய்க.)

41. அ) வெள்ளரிப் __________

ஆ) குதிரை __________

இ) யானை __________

ஈ) கூடை __________

உ) அணிற் __________

(மரபுச்சொற்களை எழுதுக.)